கொண்ட தென்கரை முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 1984 இல் தங்கியிருப்பு வீதம் 34 சதவீதமாக விளங்கி 2 சதவீதப் புள்ளியிலான சிறிதளவு அதிகரிப்பைக் கொண்டிருந்தது. மலைநாட்டு, புராதன நகர பிரதேசங்கள் 1984 இல் முறையே 32 சதவீத, 31 சதவீத தங்கியிருப்போர் வீதங்களைக் கொண்டிருந்தன. முன்னைய ஆண்டின் 11 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் அதிகுறைந்த தங்கியிருப்பு வீதமான 6 சதவீதம் வட பிராந்தியத்தில் அவதானிக்கப்பட்டது.


சுற்றுலாத்துறையினைப் பழைய நிலைக்குக் கொண்டுவரும் நோக்கில் சுற்றுலாச் சபை அதன் உடன் பயனளிக்கத்தக்க நிகழ்ச்சித் திட்டத்தைத் தொடர்ந்து நடைமுறைப்படுத்தி மீளாய்வின் கீழுள்ள ஆண்டில் வெளிநாட்டில் அபிவிருத்தி வேலைகளுக்காக ஏறத்தாழ ரூ. 490 இலட்சம் செலவிட்டது. வர்த்தக வங்கிகளாலும் ஏனைய நீண்ட தவணை கொடுகடன் நிறுவனங்களாலும் விடுதிச் செயற்றிட்டங்களுக்காக வழங்கப்பட்ட கடன் வசதிகளை மீள அட்டவணைப் படுத்துதல் சுற்றுலா நடவடிக்கைகளின் வீழ்ச்சியினால் விடுதி நடத்துநர் எதிர் கொள்ளும் நிதிச் சிக்கல்களுக்கு நிவாரணம் வழங்கும் நோக்குடன் மொத்த விற்பனவு வரியை 10 சதவீதத்திலிருந்து 5 சதவீதத்திற்குக் குறைத்தல் போன்ற வற்றின் மூலம் பல சலுகைகளையும் அரசு இக்கைத்தொழிலிற்கு வழங்கியது.

## சென்மதி நிலுவை

நடைமுறைக் கணக்குப்பற்றுக்குறையில் ஏற்பட்டுள்ள கணிசமானளவு குறைப்பானது 1984 இல் சென்மதி நிலுவையில் குறிப்பிடத்தக்களவு முன்னேற்றத்தினை ஏற்படுத்தியது. நடைமுறைக் கணக்குப் பற்றுக்குறையில் ஏற்பட்ட குறைப்பானது, வர்த்தகமாற்று விகிதங்களின் நியதிகளில் குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தினதும், வெளிநாட்டுத் தனியார் பணவனுப்பல்களில் ஏற்பட்ட மேலதிக அதிகரிப்பினதும் விளைவாகும். நடைமுறைக் கணக்குப்பற்றுக் குறையானது 1983 இன் ரூ. 111,220 இலட்சத்திலிருந்து (சிஎஉ 4,410 இலட்சம்) ரூ. 7,890 இலட்சத்திற்கு (சிஎஉ260 இலட்சம்)குறைக்கப்பட்டது. 1984 ஆண்டுக்காலத்தில் வணிகத்துறையின் வர்த்தக நிலுவையில் ஓரேயளவான முன்னேற்றம் காணப்பட்டது. சிஎஉ நியதிகளில் ஏற்று மதிகள் 45 சதவீத அதிகரிப்பினைப் பதிவு செய்துள்ள வேளையில் இறக்குமதிகள் 1.7 சதவீதத்தால்சிறிதளவு அதிகரித்துள்ளன. நடைமுறைக் கணக்குப் பற்றுக்குறையானது மொத்த உள்நாட்டு உற்பத்தியின் விகிதமாக 1983 இன் 9.1 சதவீதத்தில் இருந்து 1984 இல் 0.5 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தது. அலுவல்சார் மாற்றல்கள் தவிர்ந்த நடைமுறைக் கணக்குப் பற்றுக்குறை 1983 இன் ரூ. 151,380 இலட்சத்துடன் (சிஎஉ 6,010 இலட்சம்) ஒப்பிடுகையில் ரூ. 46,920 இலட்சமாகவும் (சிஎஉ 1,760 இலட்சம்) மொத்த உள்நாட்டு உற்பத்திக்கான, அதன் விகிதமானது இவ்விரு ஆண்டுகளுக்கும் இடையில் 12.4 சதவீதத்திலிருந்து 3.1 சதவீதத்திற்கும் வீழ்ச்சியடைந்தது.

வணிக ஏற்றுமதிகளில் இருந்தான வருவாய்கள் பொருட்களின் அளவுகளிலும் விலைகளிலும் ஏற்பட்ட அதிகரிப்பின் விளைவாக 1983 இன் ரூ. 250,380 இலட்சத்திலிருந்து (சிஎஉ 9,930 இலட்சம்) 1984 இல் ரூ. 374,530 இலட்சத்திற்கு (சிஎஉ 14,390 இலட்சம்) அதிகரித்தது. தேயிலையிலிருந்தான ஏற்றுமதி வருவாய்கள் மட்டும் ரூ. 74,690 இலட்சத்தினால் (சிஎஉ 2,750 இலட்சம்) அதிகரித்தன. மூன்று முக்கிய மரபு ரீதியான ஏற்றுமதிப் பொருட்களில் இருந்தான கூட்டு ஏற்றுமதி வருவாய்கள் 1984 இல் ரூ. 80,620 இலட்சத்தால் (சிஎஉ 2,910 இலட்சம்) அதிகரித்தன. ஏற்றுமதியைப் பொறுத்தவரை ஒரு குறிப்பிடத் தக்க தன்மையாக, புடவைகள் தைக்கப்பட்ட ஆடைகள், மற்றும் ஏனைய

## சென்மதி நிலுவை
ஆண்டு தோறும்




இலங்கை மத்திய வங்கி

கைத்தொழில் ஏற்றுமதிகள் போன்ற மரபுரீதியல்லாத ஏற்றுமதிகளில் ஏற்பட்ட குறிப்பிடத்தக்க அதிகரிப்பு முக்கியமாக விளங்கியது. இந்த மரபுரீதியல்லாத உற்பத்திகளில் இருந்தான ஏற்றுமதி வருவாய்கள் 1984 இல் 28 சதவீதத்தால் அதிகரித்தது.

வணிக இறக்குமதிகளின்மீது ஏற்பட்ட செலவுகள் 1983 இன் ரூ. 452,060 இலட்சத்துடன் (சிஎஉ 17,940 இலட்சம்) ஒப்பிடுகையில் 1984 இல் ரூ. 476,260 இலட்சமாக சிஎஉ 18250 இலட்சம் விளங்கின. குறிப்பிடத்தக்க நுகர்வுப் பொருட்கள் குறிப்பாக நீண்டகாலப் பாவனைக்குரிய அரிசி, சீனி மற்றும் நீண்டகாலப் பாவனைக்குரிய நுகர்வுப் பொருட்கள், முதலீட்டுப்பொருட்கள் ஆகியவற்றின் மீதான இறக்குமதிச் செலவானது 1984 இல் ஒரு வீழ்ச்சியைக் காட்டியது. இதன் விளைவாக இறக்குமதிகளிலான அதிகரிப்புக்கள் முக்கியமாகப் பெற்றோலியப் பொருட்கள் தவிர்ந்த இடைநிலைப் பொருட்களின் வகையில் காணப்பட்டது.

பணிகள் கணக்கில் உள்ள பற்றுக்குறை 1983 இன் ரூ. 14,110 இலட்சத்தில் (சிஎஉ 560 இலட்சம்) இருந்து 1984 இல் ரூ. 15,580 இலட்சத்திற்கு (சிஎஉ 600 இலட்சம்) மேலும் விரிவுபடுத்தப்பட்டது. இந்த அதிகரித்த குறையானது, முக்கியமாகப் பயணத் துறையில் ஏற்பட்ட உயர்ந்த வெளிப்பாய்ச்சலின் விளைவாகும். எவ்வாறெனினும் சுற்றுலாத்துறையிலிருந்தான மொத்த வருவாய்கள் ரூ. 24,040 இலட்சத்திலிருந்து (சிஎஉ 960 இலட்சம்) 1984 இல் ரூ. 25,920 இலட்சமாக (சிஎஉ 990 இலட்சம்) சிறிதளவு அதிகரிப்பினைக் காட்டியது.

வெளிநாட்டுக் கடன்கள், பன்னாட்டு நாணய நிதிய எடுப்பனவுகள் என்பன மீதான வட்டிக் கொடுப்பனவுகள் பணிகள் கணக்கில் தொடர்ந்தும் மிகப் பெரிய செலவு விடயமாக விளங்கியது. வட்டிக் கொடுப்பனவுகள் தொடர்பான வெளிநாட்டுச் செலாவணியின் வெளிப்பாய்ச்சல் 1983 இன் ரூ. 40,150 இலட்சத் (சிஎஉ 1,610 இலட்சம்)தில் இருந்து 1984 இல் ரூ. 45,780 இலட்சமாக (சிஎஉ 1,750 இலட்சம்) அதிகரித்தது. இது பொருட்கள், பணிகள் துறைகளின் ஏற்றுமதியிலிருந்தான வெளிநாட்டுச் செலாவணி வருவாய்களின் 10 சதவீதத்திற்கு வகை கூறியது.

1984 இன் வெளிநாட்டுச் சொத்துக்களில் ஏற்பட்ட படிப்படியான வளர்ச்சியானது வெளிநாட்டில் இலங்கையின் முதலீட்டுத் தொகுதிகளை அதிகரிப்பதற்கு உதவியதுடன் இவை, பணிகள் கணக்கில் பெரிய பாதிப்புக்களைத் தடுக்கவும் செய்தது. வெளிநாட்டு முதலீடுகளிலிருந்தான வட்டி வருவாய்கள் 1983 இன் ரூ. 10,520 இலட்சத்துடன் (சிஎஉ 420 இலட்சம்) ஒப்பிடுகையில் 1984 இல் ரூ. 14,790 இலட்சமாக (சிஎஉ 570 இலட்சம்) விளங்கியது. ஆகவே வட்டிக் கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பான வெளிநாட்டுச் செலாவணியின் வெளிப்பாய்ச்சல்கள் சிஎஉ நியதிகளில் கிட்டத்தட்ட கடந்த ஆண்டின் அதே மட்டத்திலேயே மாறுதிருந்தது. (அதாவது சிஎஉ 1,180 இலட்சம்). ஆகவே முழுமையான நியதிகளில் முதலீட்டு வருமானத்தின் காரணமாகத் தோன்றிய தேறிய வெளிப்பாய்ச்சல்கள் உயர்வானதாக இருந்தபோதும் சென்மதி நிலுவையின் மீதான தாக்கம் 1983 ஆம் ஆண்டிலும் பார்க்க உயர்வான சுமையினைப் பிரதிபலிக்கவில்லை.

துறைமுகம், போக்குவரத்து, காப்புறுதி, அரச செலவினம், ஏனைய பல்வின பணிகளில் இருந்தான தேறிய வெளிநாட்டுச் செலாவணி வருவாய்கள் முன்னைய ஆண்டின் ரூ. 3150 இலட்சத் (சிஎஉ 130 இலட்சம்) துடன் ஒப்பிடுகையில் 1984 இல் ரூ. 4,200 இலட்சமாக (சிஎஉ 160 இலட்சம்) விளங்கியது.

அட்டவணை 1.35

**சென்மதி நிலுவை — பகுப்பாய்வு வெளிப்படுத்துகை 1980 1984**

| விடயம் | பத்து இலட்சம் ரூபாய்களில் | | | | | சிஎஉ பத்து இலட்சம் | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | 1980 | 1981 (அ) | 1982 (அ) | 1983 (அ) | 1984 (ஆ) | 1980 | 1981 (அ) | 1982 (அ) | 1983 (அ) | 1984 (ஆ) |
| 1. வணிகப் பொருட்கள் ... | – 16,312 | – 15,616 | – 20,403 | – 20,168 | – 10,173 | – 758 | – 693 | – 890 | – 801 | – 386 |
| ஏற்றுமதிகள் ... | 17,603 | 20,507 | 21,098 | 25,038 | 37,453 | 818 | 903 | 918 | 993 | 1,439 |
| இறக்குமதிகள் ... | 33,915 | 36,123 | 41,501 | 45,206 | 47,626 | 1,576 | 1,596 | 1,808 | 1,794 | 1,825 |
| 2. பணிகள் ... | + 859 | + 82 | – 314 | – 1,411 | – 1,558 | + 40 | + 4 | – 13 | – 56 | – 60 |
| பெறுகைகள் ... | 4,605 | 6,019 | 6,962 | 8,033 | 8,609 | 214 | 265 | 304 | 320 | 330 |
| கொடுப்பனவுகள் ... | 3,746 | 5,937 | 7,276 | 9,444 | 10,167 | 174 | 261 | 317 | 376 | 390 |
| 3. பொருட்களும் பணிகளும் (1+2) ... | – 15,453 | – 15,534 | – 21,717 | – 21,579 | – 11.731 | – 718 | – 689 | – 903 | – 857 | – 446 |
| 4. மாற்றல்கள் (தேறிய) ... | + 4,541 | + 7,036 | + 8,873 | + 10,457 | + 10,942 | + 211 | + 308 | + 387 | + 416 | + 420 |
| தனியார் (தேறிய) ... | 2,260 | 3,918 | 5,494 | 6,441 | 7,039 | 105 | 172 | 240 | 256 | 270 |
| அலுவல்கள் (தேறிய) ... | 2,281 | 3,118 | 3,379 | 4,016 | 3,903 | 106 | 136 | 147 | 160 | 150 |
| 5. நடைமுறைக் கணக்கு நிலுவை (3+4) ... | – 10,912 | – 8,498 | – 11,844 | – 11,122 | – 789 | – 507 | – 381 | – 516 | – 441 | – 26 |
| 6. நாணயமல்லா மூலதனம் ... | + 6,585 | + 7,691 | + 10,954 | + 10,616 | + 8,561 | + 306 | + 341 | + 477 | + 420 | + 328 |
| தனியார் துறை ... | 3,981 | 2,571 | 5,517 | 4,005 | 180 | 185 | 116 | 240 | 160 | 7 |
| அரசதுறை ... | 2,604 | 5,120 | 5,437 | 6,611 | 8,381 | 121 | 225 | 237 | 260 | 321 |
| நீண்ட காலம் (தேறிய) ... | 2,604 | 5,120 | 5,437 | 6,613 | 8,381 | 121 | 225 | 237 | 260 | 321 |
| பெறுகைகள் ... | (4,326) | (6,087) | (6,954) | (8,546) | (10,075) | (201) | (267) | (304) | (337) | (386) |
| கடன் தீர்ப்பனவுகள் ... | (1,722) | (967) | (1,517) | (1933) | (1,694) | (80) | (42) | (67) | (77) | (65) |
| குறுகிய காலம் (தேறிய) ... | — | — | — | – 2 | — | — | — | — | — | — |
| 7. பெறுமதி சீராக்கங்கள் ... | + 607 | – 39 | – 124 | + 82 | – 39 | — | — | — | — | — |
| 8. பிழைகளும் தவிர்ப்புகளும் ... | + 495 | + 188 | + 5 | + 766 | – 671 | + 23 | + 2 | + 21 | + 21.6 | – 5 |
| 9. சிஎஉ ஒதுக்கீடுகள் ... | 258 | 252 | — | — | — | 12 | 12 | — | — | — |
| 10. மொத்த நிலுவை | – 2,967 | – 406 | – 1,009 | + 342 | + 7,062 | – 166 | – 26 | + 18 | + 0.6 | + 297 |
| 11. நாணய அசைவுகள் (– மிகை) .. | + 2,967 | + 406 | + 1,009 | – 342 | – 7,062 | + 166 | + 26 | – 18 | – 0.6 | – 297 |
| சராசரி செலாவணி வீதம் — இரூ/சிஎஉ .. | | | | | | 21.52 | 22.67 | 22.98 | 25.16 | 26.08 |

(அ) திருத்தப்பட்டது.

(ஆ) தற்காலிகமானது.

குறிப்பு: நாணயத்துறையிலுள்ள எல்லா கொடுக்கல் வாங்கல்களும் கால முடிவு வீதங்களில் மாற்றப்படுகின்றன.

மூலம்: இலங்கை மத்திய வங்கி.

## அட்டவணை 1.36
## பணிகளும் மாற்றல்களும் 1983—1984

ரூ. பத்து இலட்சம் (சிஎஉ. பத்து இலட்சம் அடைப்புக் குறிக்குள்)

| விடயம் | வரவு 1983 (அ) | வரவு 1984 (ஆ) | வரவு 1983/84 மாற்றம் | பற்று 1983 (அ) | பற்று 1984 (ஆ) | பற்று 1983/84 மாற்றம் | நிலுவை 1983 (அ) | நிலுவை 1984 (ஆ) |
|---|---|---|---|---|---|---|---|---|
| துறைமுகம், போக்குவரத்து, காப்புறுதி | 1,617 (64) | 1,828 (70) | + 211 (+6) | 1,400 (55) | 1,459 (56) | + 59 (+1) | + 217 (+9) | + 369 (+14) |
| பயணம் | 2,404 (96) | 2,592 (99) | + 188 (+3) | 916 (36) | 1,214 (47) | + 298 (+11) | + 1,488 (+60) | + 1,378 (+52) |
| முதலீட்டு வருவாய் | 1,056 (42) | 1,480 (57) | + 424 (+15) | 4,270 (171) | 4,836 (185) | + 566 (+14) | - 3,214 (-129) | - 3,356 (-128) |
| 1. இலாபங்களும், பங்கிலாபங்களும் | 4 (—) | 1 (—) | — 3 (—) | 255 (10) | 258 (10) | +3 (—) | — 251 (-10) | — 257 (-10) |
| 2. வட்டி | 1,052 (42) | 1,479 (57) | + 427 (+15) | 4,015 (161) | 4,578 (175) | + 563 (+14) | - 2,963 (-119) | - 3,099 (-118) |
| அரச செலவினம் | 379 (15) | 302 (11) | —77 (-4) | 270 (11) | 299 (11) | + 29 (—) | + 109 (+4) | + 3 (—) |
| பல்வகை | 2,577 (103) | 2,407 (93) | — 170 (-10) | 2,588 (103) | 2,359 (91) | — 229 (-12) | — 11 (—) | + 48 (+2) |
| மொத்தப் பணிகள் | 8,033 (320) | 8,609 (330) | + 576 (+10) | 9,444 (376) | 10,167 (390) | + 723 (+14) | - 1,411 (-56) | - 1,558 (-60) |
| தனியார் மாற்றல்கள் | 6,916 (275) | 7,672 (294) | + 756 (+19) | 475 (19) | 633 (24) | + 158 (+5) | + 6,441 (+256) | + 7,039 (+270) |
| அலுவல்சார் மாற்றல்கள் | 4,016 (160) | 3,903 (150) | — 113 (-10) | — (—) | — (—) | — (—) | + 4,016 (+160) | + 3,903 (+150) |
| மொத்த மாற்றல்கள் | 10,932 (435) | 11,575 (444) | + 643 (+9) | 475 (19) | 633 (24) | + 158 (+5) | + 10,457 (+416) | + 10,942 (+420) |
| மொத்த பணிகளும், மாற்றல்களும் | 18,965 (755) | 20,184 (774) | + 1,219 (+19) | 9,919 (395) | 10,800 (414) | + 881 (+19) | + 9,046 (+360) | + 9,384 (+360) |

(அ) திருத்தப்பட்டது.
(ஆ) தற்காலிகமானவை.

மூலம்: இலங்கை மத்திய வங்கி

வெளிநாட்டிலிருந்தான பணியாளர் பணவனுப்பல்களை உள்ளடக்கிய தனியார் மாற்றல்களில் இருந்தான மொத்த வருவாய்கள், சிஎஉ நியதிகளில் 7 சதவீதத்தால், அதிகரித்து ரூ. 76,720 இலட்சங்களை (சிஎஉ 2,940 இலட்சம்) அடைந்தது. எனினும் தனியார் மாற்றல்களில் இருந்தான தேறிய வருவாய்கள் 5 சதவீதத்தால் மாத்திரம் அதிகரித்து ரூ. 70,390 இலட்சங்களுக்கு (சிஎஉ 2,700 இலட்சம்) வகை கூறியது. இது 1983 உடன் ஒப்பிடுகையில் 1984 இல் ஏற்பட்ட கூடிய வெளிப்பாய்ச்சல்களின் விளைவினால் ஏற்பட்டதாகும். 1970 களின் தொடக்கத்தில் மிகக் குறைவாக இருந்த தனியார் மாற்றல்கள், இப்பொழுது முழு மொத்த சென்மதி நிலுவைக் கொடுப்பனவுச் செயலாக்கத்தில் ஓர் முக்கிய காரணியாக விளங்குகின்றது.

செயற்றிட்டக் கொடைகள், உணவுப் பண்டக் கொடைகள் ஆகிய உள்ளடங்கிய அலுவல்சார் மாற்றல்கள் இவ்விரு ஆண்டுகளுக்குமிடையில் ரூ. 40,160 இலட்சத்திலிருந்து (சிஎஉ 1,600 இலட்சம்) ரூ. 39,030 இலட்சத்திற்கு (சிஎஉ 1,500 இலட்சம்) வீழ்ச்சியடைந்தது. எனினும், 1983 ஆம் ஆண்டு தொடர்பான எண்தொகை அவசரகால நிவாரண உதவித்தொகை வடிவில் பெறப்பட்ட ரூ. 2,880 இலட்சத்தினையும் (சிஎஉ 110 இலட்சம்) உள்ளடக்கியிருந்தது. மொத்த அலுவல்சார் மாற்றல்களில் செயற்றிட்டக் கொடைகளின் விகிதமானது 1983 இன் 58 சதவீதத்திலிருந்து 1984 இல் 60 சதவீதத்திற்கு அதிகரித்தது.

தனியார் அலுவல்சார் மாற்றல்கள் தொடர்பான, வெளிநாட்டுச் செலாவணியின் தேறிய வருவாய்கள் இவ்விரு ஆண்டுகளுக்குமிடையில் ரூ. 104,570 இலட்சத்திலிருந்து (சிஎஉ 4,160 இலட்சம்) ரூ. 109,420 இலட்சத்திற்கு (சிஎஉ 4,200 இலட்சம்) அதிகரித்ததுடன், இது பொருட்கள் பணிகள் நிலுவையில் ஏற்பட்ட ரூ. 117,310 இலட்சம் (சிஎஉ 4,460 இலட்சம்) கொண்ட பற்றுக்குறையின் ஏறக்குறைய 95 சதவீதமானவற்றை ஈடுசெய்வதற்குப் போதுமானதாகவும் இருந்தது. இது ரூ. 7,890 இலட்சம் (சிஎஉ 260 இலட்சம்) கொண்ட நடைமுறைக் கணக்கு நிலுவையினை ஏற்படுத்தியதுடன் நாணயமல்லா வெளிப்பாய்ச்சல் மூலம் நிதியிடப்படவுள்ளது. எனினும் நேரடிமுதலீடு குறுங்கால மூலதனப் பாய்ச்சல்களை உள்ளடக்கிய தனியார் அரசதுறை மூலதனப் பாய்ச்சல்கள் என்பனவற்றைக் கொண்டுள்ள நாணயமல்லா மூலதனத்தின் உண்மையான உட்பாய்ச்சல்கள், நிலுவை நிதியிடப்படுவதற்கு வேண்டிய துணை அளவினைவிட உயர்ந்தளவில் விஞ்சின. இந்த அபிவிருத்திகளின் தேறிய விளைவாக 1984 ஆம் ஆண்டின் சென்மதி நிலுவைகளில் சிஎஉ 2,970 இலட்சம் கொண்டதோர் முழு மொத்தமிகை ஏற்பட்டது.

1984 இன் தனியார் மற்றும் அரசதுறைகள் இரண்டினதும் தேறிய உட்பாய்ச்சல்கள் கடந்த ஆண்டின் ரூ. 106,160 இலட்சத்துடன் (சிஎஉ 4,200 இலட்சம்) ஒப்பிடுகையில் ரூ. 85,610 இலட்சமாக (சிஎஉ 3,280 இலட்சம்) விளங்கின. இது 22 சதவீத வீழ்ச்சியினைக் காட்டியது. இக்குறைப்பானது கடந்த ஆண்டினைப் போன்று நேரடி முதலீட்டினைவிட தனியார் துறை மூலதன உட்பாய்ச்சல்களில் ஏற்பட்ட வீழ்ச்சியினால் ஏற்பட்டதாகும். தனியார்துறையின் தேறிய மூலதனப் பாய்ச்சலானது 1983 இன் ரூ. 40,050 இலட்சத் (சிஎஉ 1,600 இலட்சம்) துடன் ஒப்பிடுகையில் 1984 இல் ரூ. 1,800 இலட்சமாக (சிஎஉ 70 இலட்சம்) விளங்கியதென மதிப்பிடப்பட்டுள்ளது. எனினும், அரச துறைக்கான நாணயமல்லா மூலதனத்தின் தேறிய உட்பாய்ச்சல்கள் இரண்டு ஆண்டுகளுக்கும் இடையில் ரூ. 66,110 இலட்சத் (சிஎஉ 2,600 இலட்சம்) திலிருந்து ரூ. 83,810 இலட்சத்திற்கு (சிஎஉ 3,210 இலட்சம்) அதிகரித்துள்ளது.

அட்டவணை 1.37

## வெளிநாட்டு மூலவளங்களின் இடைவெளிக்கான நிதியிடல் 1982—1984

| வகை | ப. இ. ரூபாய்களில் | | | சி. எ. உ. பத்து இலட்சம் | | |
|---|---|---|---|---|---|---|
| | 1982(அ) | 1983(அ) | 1984(ஆ) | 1982(அ) | 1983(அ) | 1984(ஆ) |
| **1.** வெளிநாட்டு வருவாய்கள் ... | **34,084** | **39,987** | **53,734** | **1,485** | **1,588** | **2,053** |
| **1.1** ஏற்றுமதி ... | 21,098 | 25,033 | 37,453 | 918 | 993 | 1,439 |
| **1.2** பணிகள் ... | 6,962 | 8,033 | 8,609 | 304 | 320 | 330 |
| **1.3** தனியார் மாற்றல்கள் ... | 6,024 | 6,916 | 7,672 | 263 | 275 | 294 |
| **2.** வெளிநாட்டுக் கொடுப்பனவுகள் ... | **63,382** | **72,937** | **75,694** | **2,763** | **2,905** | **2,901** |
| **2.1** இறக்குமதிகள் ... | 41,501 | 45,206 | 47,626 | 1,808 | 1,794 | 1,825 |
| **2.2** பணிகள் ... | 7,276 | 9,444 | 10,167 | 317 | 376 | 390 |
| **2.3** தனியார் மாற்றல்கள் ... | 530 | 475 | 633 | 23 | 19 | 24 |
| **2.4** மூலதனமீள்கொடுப்பனவுகள் ... | 14,075 | 17,812 | 17,268 | 615 | 716 | 662 |
| **3.** வெளிநாட்டு மூலவளங்களின் இடைவெளி ... | **– 29,298** | **– 32,950** | **– 21,960** | **– 1,278** | **– 1,317** | **– 838** |
| **4.** மூலவளங்களின் இடைவெளிக்கான நிதியிடல் ... | **+ 29,298** | **+ 32,950** | **+ 21,960** | **+ 1,278** | **+ 1,317** | **+ 838** |
| **4.1** படுகடன் நிலையினைப் பாதிக்காத கொடுக்கல் வாங்கல்களுக்கான நிதியிடல் ... | 4,756 | 4,945 | 4,837 | 207 | 197 | 186 |
| **4.1.1** அலுவல்சார்கொடைவழங்கல் | 3,379 | 4,016 | 3,903 | 147 | 160 | 150 |
| **4.1.2** நேரடி முதலீடுகள் ... | 1,377 | 929 | 934 | 60 | 37 | 36 |
| **4.1.3** சிஎஉ ஒதுக்கீடுகள் ... | — | — | — | — | — | — |
| **4.2** ஒதுக்குகளின் கடன்பாடுகளும் பயன்பாடும் ... | 24,661 | 27,157 | 17,833 | 1,050 | 1,099 | 657 |
| **4.2.1** நீண்ட காலக் கடன்கள் ... | 5,987 | 7,330 | 9,098 | 262 | 290 | 349 |
| **4.2.2** குறுங்காலக் கொடுகடன்கள் | 10,504 | 14,370 | 11,066 | 458 | 571 | 423 |
| **4.2.3** நிரம்பலர் கொடுகடன்களும் ஏனைய நீண்டகாலக் கடன்களும் | 4,307 | 2,087 | 977 | 188 | 81 | 38 |
| **4.2.4** வர்த்தகக் கடன்பாடுகள் ... (தனியார்துறை) ... | 1,702 | 2,259 | 1,034 | 74 | 90 | 40 |
| **4.2.5** வங்கிக் கடன்பாடுகள் ... | 1,595 | 30 | — | 68 | — | — |
| **4.2.6** இருபுடை நிலுவைகள் ... | — | — | — | — | — | — |
| **4.2.7** ப. நா. நி. எடுப்பனவுகள் ... | 1,506 | 1,622 | 1,288 | 45 | 47 | 31 |
| **4.2.8** ஏனையவை ... | 1,071 | 1,252 | 285 | 46 | 41 | 13 |
| **4.2.9** ஒதுக்குகள் ... | – 2,011 | – 1,793 | – 5,915 | – 91 | – 21 | – 237 |
| **5.** பெறுமதிச் சீராக்கங்கள் ... | – 124 | + 82 | – 39 | — | — | — |
| **6.** பிழைகளும் தவறுகளும் ... | + 5 | + 766 | – 671 | + 21 | + 21 | – 5 |

(அ) திருத்தப்பட்டது.

(ஆ) தற்காலிகமானவை

மூலம்: இலங்கை மத்திய வங்கி.

கொழும்பு பெரும்பாக பொருளாதார ஆணைக்குழு வெளிநாட்டு, முதலீட்டு மதியுரைக்குழு ஆகியவற்றிற்கான நேரடி முதலீடானது 1984 இல் ரூ. 9,120 இலட்சமாக (சிஎஉ 350 இலட்சம்) விளங்கியது. சிஎஉ நியதிகளில் நேரடி முதலீட்டின் பாய்ச்சலானது பெரும்பாலும் கடந்த ஆண்டினைப் போலவே இருந்தது. எனினும் மூலதனக் கடன்கள் வடிவில், தனியார் துறைக்கான நாணயமல்லா மூலதன த்தின்தேறிய உட்பாய்ச்சல்களில் கணிசமானதொரு வீழ்ச்சி காணப்பட்டது இவ்வீழ்ச்சியானது நீண்டகால, குறுங்காலமூலதனப் பாய்ச்சல்கள் இரண்டிலும் காணப்பட்டது. வரையறுக்கப்பட்ட ஏயர் லங்காவுக்கான தேறிய நீண்டகால மூலதன உட்பாய்ச்சல்கள் 1983 இல் ரூ. 4,800 இலட்சத் (சிஎஉ 190 இலட்சம்) திலிருந்து 1984 இல் ரூ. 1,540 இலட்சத்திற்கு (சிஎஉ 60 இலட்சம்) வீழ்ச்சி

யடைந்தது. தனியார் துறையின் வெளிநாட்டுக் கடன்களின் மொத்தப் பகிர்ந்தளிப்புக்களில் ஏற்பட்ட குறைப்பின் விளைவாக ஏனைய தனியார் நீண்டகால கடன்கள் வடிவிலான தேறிய நாணயமல்லா மூலதன உட்பாய்ச்சல்களும், ரூ.19,750 இலட்சத்தால் (சிஎஉ 770 இலட்சம்) வீழ்ச்சியடைந்தன. குறுங்கால நாணயமல்லா மூலதன உட்பாய்ச்சல்கள் 1984 இல் ரூ. 15,480 இலட்சத்தால் (சிஎஉ 630 இலட்சம்) வீழ்ச்சியடைந்தன. இவ்வீழ்ச்சியானது இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் ஏற்றுக்கொள்ளத்தக்க வெளிநின்ற கொடுகடன்களின் குறைக்கப்பட்ட மட்டங்களின் நேரடி விளைவாகும். குறுங்கால வர்த்தகக் கொடுகடன்கள் 1984 இல் ரூ. 1,870 இலட்சத்தினுல் (சிஎஉ 70 இலட்சம்) அதிகரித்தன.


அரசதுறைக்கான நாணயமல்லா மூலதனத்திற்கான அதிகரிப்புத் திட்டக் கடன்கள், பண்டக் கடன்கள் ஆகியவற்றின் உயர்ந்த பகிர்ந்தளிப்பின் காரணமாக ஏற்பட்டது. திட்டக் கடன்களின் மொத்தப் பகிர்ந்தளிப்புக்கள் 1983 இன் ரூ. 53,840 இலட்சத்துடன் (சிஎஉ 2,130 இலட்சம்) ஒப்பிடுகையில் 1984 இல் ரூ. 66,500 இலட்சமாக (சிஎஉ 2,550 இலட்சம்) காணப்பட்டன. இவ்விரண்டு ஆண்டுகளுக்குமிடையில் உணவும், பண்டக் கடன்களுக்குமான பகிர்ந்தளிப்புக்கள் ரூ. 13,380 இலட்சத்திலிருந்து (சிஎஉ 530 இலட்சம்) ரூ. 15,680 இலட்சமாக (சிஎஉ 600 இலட்சம்) அதிகரித்தன. அத்துடன் எடுப்பனவு செய்யப்படாத யூரோ நாணய பங்குக் கடன்களின் நிலுவையான 350 இலட்சம் ஐக்கிய அமெரிக்க டொலர்களும் (ரூ. 8,800 இலட்சம், சிஎஉ 340 இலட்சம்) 1984 இல் எடுப்பனவு செய்யப்பட்டன. மேலும் நடைமுறையில் இருக்கும் அபிவிருத்திச் செயற்றிட்டங்களின் தொடர்பாக 1983 இல் பெறப்பட்ட வர்த்தகக் கடன்பாடுகள் ரூ. 12,170 இலட்சத் (சிஎஉ 470 இலட்சம்) திற்கு எதிராக 1984 இல் ரூ. 9,770 இலட்சம் (சிஎஉ 370 இலட்சம்) பெறப்பட்டது. இதன் விளைவாக அரசதுறைக்கான நாணயமல்லா மூலதனத்தின் மொத்த உட்பாய்ச்சல்கள் 1983 இன் ரூ. 85,460 இலட்சத்திலிருந்து (சிஎஉ 3,370 இலட்சம்) 1984 இல் ரூ. 100,750 இலட்சத் (சிஎஉ 3,860 இலட்சம்) திற்கு அதிகரித்தது. முன்னேற்றமடைந்த நிதி நிலைமைகளினுல் அரசு யூரோ நாணய எடுப்பனவின் முழுத் தொகையையும் மீள் முதலீடு செய்யத் தீர்மானித்துள்ளது. வெளிநாட்டுக் கடன்களின் கடன் கரைப்பு கடந்த ஆண்டின் ரூ. 19,330 இலட்சத்துடன்(சிஎஉ 770 இலட்சம்) ஒப்பிடுகையில் 1984 இல் ரூ. 16,940 இலட்சமாக (சிஎஉ 650 இலட்சம்) விளங்கியது. 1983 இற்கான எண்தொகை நடைமுறையில் இருக்கும் அபிவிருத்திச் செயற்றிட்டங்களுக்கான முற்கொடுப்பனவுகளையும் உள்ளடக்கியது.

### வெளிநாட்டுச் சொத்துக்கள்

இலங்கையின் மொத்த வெளிநாட்டுச் சொத்துக்களின் நிலைமை முன்னேற்றமடைந்து 1983 இன் ரூ. 130,260 இலட்சத்திலிருந்து (சிஎஉ 4,990 இலட்சம்) 1984 இல் ரூ. 189,420 இலட்சமாக (சிஎஉ 7,350 இலட்சம்) விளங்கி சிஎஉ நியதிகளில் 47 சதவீத அதிகரிப்பினைக் காட்டியது. சென்மதி நிலுவைகளின் முன்னேற்றத்தில் ஏற்பட்ட முழுமையான விளைவுகளைப் பிரதிபலிக்கின்றவகையில், தேறிய வெளிநாட்டுச் சொத்துக்கள் 1984 இல் ஒரு குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தைக் காட்டியதுடன் ஆண்டு இறுதியில் ரூ. 71,280 இலட்சத்தை (சிஎஉ ரூ. 2,840 இலட்சம்) அடைந்தன.

## வெளிநாட்டுச் சொத்துக்கள்

காலாண்டு தோறும்




இலங்கை மத்திய வங்கி

இலங்கை அரசினதும், மத்திய வங்கியினதும் மொத்த வெளிநாட்டுச் சொத்துக்களை உள்ளடக்கிய மொத்த அலுவல்சார் ஒதுக்குகள் 1983 இன் இறுதியில் காணப்பட்ட ரூ. 79,010 இலட்சத்துடன் (சிஎஉ 3,030 இலட்சம்) ஒப்பிடுகையில் 1984 இறுதியில் ரூ. 137,240 (சிஎஉ 5330 இலட்சம்) இலட்சமாக விளங்கியது. இது 1984 காலப்பகுதியில் மொத்த அலுவல்சார் ஒதுக்குகளில் 76 சதவீதம் அதிகரிப்பினைச் சுட்டிக் காட்டியது. இவ்வதிகரிப்பானது வெளிநாட்டிலுள்ள மத்திய வங்கியின் திரவ நிலுவைகளிலும் வெளிநாட்டுப் பிணைகளிலான முதலீடுகளிலும் அரசின் யூரோ நாணயக் கடன்களின் தொடர்பான முதலீடுகளிலும் முக்கியமாகக் காட்டப்பட்டுள்ளன. வர்த்தக வங்கிகளின் மொத்த வெளிநாட்டுச் சொத்துக்கள் 1983 இல் ரூ. 51,250 இட்சத்துடன் (சிஎஉ 1,960 இலட்சம்) ஒப்பிடுகையில் 1984 இல் ரூ. 52,180 இலட்சமாக (சிஎஉ 2,020 இலட்சம்) விளங்கியது. 1984 இறுதியில் மொத்த வெளிநாட்டுச் சொத்துக்களின் மட்டம் 1985 ஆம் ஆண்டின் 4½ மாதங்களுக்காகத் திட்டமிடப்பட்ட இறக்குமதிகளுக்கு நிதியிடப் போதுமானதாக இருந்தது.

அட்டவணை 1.38

**செலாவணிவீத அசைவுகள் (அ) 1982—1984**

| நாணயம் | ஆண்டு இறுதி செலாவணி வீதங்கள் (அலகொன்றுக்கு ரூபா) | | | முந்திய ஆண்டிற்கு மேலான % மாற்றம் (ஆ) | |
|---|---|---|---|---|---|
| | 1982 | 1983 | 1984 | 1983 | 1984 |
| சிறப்பு எடுப்பனவு உரிமைகள் .. | 23.5569 | 26.1260 | 25.8065 | 9.83 | (1.24) |
| ஐ. அ. டொலர் ... | 21.3200 | 25.0000 | 26.2800 | 14.72 | 4.87 |
| ஸ்டேர்லிங் பவுண் .. | 34.6130 | 35.8938 | 30.5111 | 3.57 | (17.64) |
| டியூச் மார்க் .. | 8.9806 | 9.1050 | 8.3495 | 1.37 | (9.05) |
| யப்பானிய யென் ... | 0.09123 | 0.10712 | 0.10497 | 14.83 | (2.05) |
| பிரான்சிய பிராங்கு ... | 3.1726 | 2.9744 | 2.7276 | (6.66) | (9.05) |
| இந்திய ரூபாய் ... | 2.1597 | 2.3531 | 2.1192 | 8.22 | (11.04) |

(அ) அடைப்புக் குறிக்குள் இருக்கும் எண்கள் இலங்கை ரூபாவின் உயர்வைக் காட்டுகின்றன.

மூலம்: இலங்கை மத்திய வங்கி.


(ஆ) மாற்றங்கள் இலங்கை ரூபாவின் சமஞக வெளிநாட்டு நாணயத்தின் அடிப்படையில் கணிக்கப்பட்டன.

**செலாவணி வீத அசைவுகள்**

1984 இல் இலங்கை ரூபாவானது ஐக்கிய அமெரிக்க டொலர் தவிர்ந்த எல்லா முதன்மை நாணயங்களுக்கும் எதிராகப் பெறுமதியில் உயர்வடைந்தது. ரூபாவானது ஐக்கிய அமெரிக்க டொலருக்கெதிராக 4.9 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்த வேளையில் ஐக்கிய இராச்சிய பவுணுக்கு எதிராக 17.6 சதவீதத்தாலும், இந்திய ரூபாவுக்கு எதிராக 11.0 சதவீதத்தாலும், டியூச் மார்க்கிற்கு எதிராகவும், பிரான்சிய பிராங்கிற்கு எதிராகவும் ஒவ்வொன்றிற்கும் 9.0 சதவீதத்தாலும், யப்பானிய யென்னுக்கெதிராக 2.0 சதவீதத்தாலும் பெறுமதியில் உயர்வடைந்தது. 1977 ஆம் ஆண்டின் நவெம்பர் 16 ஆம் நாளிலிருந்தான ஒன்று சேர்ந்த மாற்றங்களின்படி இலங்கை ரூபாவானது ஐக்கிய அமெரிக்க டொலருக்கெதிராக 39.1 சதவீதத்தாலும், யப்பானிய யென்னிற்கெதிராக 37.8 சதவீதத்தாலும், டியூச் மாக்கிற்கு எதிராக 14.9 சதவீதத்தாலும், இந்திய ரூபாவுக்கெதிராக 12.6 சதவீதத்தாலும், ஐக்கிய இராச்சிய பவுணுக்கெதிராக 4.8 சதவீதத்தாலும் பெறுமதியில் வீழ்ச்சியடைந்த வேளையில் பிரான்சிய பிராங்கிற்கு எதிராக 20.5 சதவீதத்தால் பெறுமதியில் உயர்வடைந்தது. 1984 ஆண்டுக் காலத்தில் ரூபா

## செலாவணி வீதங்கள்

1977 நவம்பர் 16ஆம் நாள் தொடக்கம்
மொத்தச் சதவீத மாற்றங்கள்




இலங்கை மத்திய வங்கி

குறிப்பு:- நவம்பரிலும், திசெம்பரிலும் செலாவணி வீதங்களிலேற்பட்ட மாற்றங்கள் 1977 இல் காட்டப்பட்டுள்ளன. ஏனைய ஆண்டுகளின் மாற்றங்கள் காலாண்டு அடிப்படையில் காட்டப்பட்டுள்ளன.

வானது சிஎஉ வுக்கெதிராக 1.2 சதவீதத்தால் பெறுமதியில் உயர்வடைந்த வேளையில், 1977 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 16 ஆம் நாளிலிருந்து 1984 ஆம் ஆண்டின் இறுதிவரை சிஎஉ க்கு எதிரான ஒன்று சேர்ந்த பெறுமதிக் குறைப்பு 26.8 சதவீதமாக விளங்கியது.

**வெளிநாட்டுப் படுகடன்**

இலங்கையின் மொத்த வெளிநின்ற வெளிநாட்டுப் படுகடன் நீண்டகால, நடுத்தரகால, குறுங்கால படுகடன்கள் எல்லாவற்றையும் உள்ளடக்கியதாக 1983 இறுதியில் ரூ. 679,520 இலட்சத்திலிருந்து (சிஎஉ 26,060 இலட்சம்) 1984 இறுதியில் ரூ. 743,210 இலட்சத்திற்கு (சிஎஉ 28,810 இலட்சம்) அதிகரித்திருந்தது. இவ்விரண்டு ஆண்டுகளுக்குமிடையில் மொத்த வெளிநின்ற வெளிநாட்டுப் படுகடன் சிஎஉ நியதிகளில் 10.5 சதவீதத்தால் அதிகரித்தபோதிலும் அதன் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் விகிதமானது 55.9 சதவீதத்திலிருந்து 49.0 சதவீதத்திற்கு வீழ்ச்சியுற்றது.

அட்டவணை 1.39

**வெளிநின்ற வெளிநாட்டுப் படுகடன் 1983—1984 (அ)**

**(பகிர்ந்தளிக்கப்பட்டது)**

| விடயம் | பத்து இலட்சம் ரூபாய்கள் | | சிஎஉ பத்து இலட்சம் | |
|---|---|---|---|---|
| | 1983 | 1984 | 1983 | 1984 |
| **(அ) நீண்டகால, நடுத்தர கால ..** | **56,891.5** | **64,649.4** | **2,173.6** | **2,509.6** |
| 1. அரசு .. | 46,729.4 | 54,191.8 | 1,785.3 | 2,103.7 |
| 2. அரச உத்தரவாதத்துடனுன அரச கூட்டுத்தாபனங்கள் .. | 9,027.3 | 9,181.3 | 344.9 | 356.4 |
| 3. அரச உத்தரவாதத்துடனுன தனியார்துறை .. | 77.8 | 98.0 | 3.0 | 3.9 |
| 4. அரச உத்தரவாதமற்ற அரச கூட்டுத்தாபனங்கள் | — | — | — | — |
| 5. அரச உத்தரவாதமற்ற தனியார்துறை .. | 1,057.0 | 1,178.3 | 40.4 | 45.6 |
| **(ஆ) குறுங்காலம்—ஏனையவையும் ...** | **11,060.5** | **9,671.1** | **432·5** | **371.2** |
| (i) ப. நா. நி. எடுப்பனவுகள் .. | 4,870.3 | 5,050.0 | 196.0 | 191.8 |
| (ii) வங்கிக் கடன்பாடுகள் .. | 1,873.1 | 12.7 | 71.6 | 0.5 |
| (iii) ஏனையவை (ஆ) ... | 4,317.1 | 4,608.4 | 164.9 | 178.9 |
| **மொத்த வெளி நிற்கின்ற (அ+ஆ) ..** | **67,952.0** | **74,320.5** | **2,606.1** | **2,880.8** |

அ தற்காலிகமானவை: மூலம்: இலங்கை மத்திய வங்கி

ஆ இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் ஏற்றுக்கொள்ளப்பட்ட கொடுகடன்களையும், வெளிநாட்டு நாணய வங்கித் தொழிற் பிரிவில் இருந்தான கொழும்பு பெரும்பாக பொருளாதார ஆணைக்குழுவின் தொழில் முயற்சிகளுக்கான வர்த்தகக் கொடுகடன்களையும், கடன்பாடுகளையும் உள்ளடக்குகின்றன.

அரசின் நீண்டகால, நடுத்தரகாலக் கடன்கள் ''நிரம்பலர் கொடுகடன்கடன்களையும்'' உள்ளடக்கியதாக 1983 இல் ரூ. 467,290 இலட்சத்திலிருந்து (சஎஉ 17,850 இலட்சம்) 1984 இல் ரூ. 541,920 இலட்சத்திற்கு (சஎஉ 21,040 இலட்சம்) அதிகரித்தது. கடன் வழங்கியோர் வகைப்படியான பகுப்பானது சுட்டிக்காட்டியவாறு அரசிற்கான பல்வகைப்படுத்தப்பட்ட கடன்களின் வெளிநின்ற தொகையானது ரூ. 33,010 இலட்சத்தால் (சஎஉ 1,360 இலட்சம்) அதிகரித்த வேளையில் இருபுடைத்தன்மை வாய்ந்த கடன்களும் நிதியச் சந்தைகளிலிருந்து கிடைக்கும் கடன்களும் 1984 இல் முறையே ரூ. 28,580 இலட்சத்தாலும் (சஎஉ 1,280 இலட்சம்) ரூ. 14,970 இலட்சத்தாலும் (சஎஉ 620 இலட்சம்) அதிகரித்தன. மொத்த அரச வெளிநின்ற வெளிநாட்டுப் படுகடன்களில் செயற்றிட்டக் கடன்கள் 48 சதவீதத்திற்கும், செயற்றிட்டமல்லாக் கடன்கள் 52 சதவீதத்திற்கும் வகை கூறின. அரச கூட்டுத்தாபனங்களின் மொத்த வெளிநின்ற கடன்கள் இவ்விரு ஆண்டுகளுக்குமிடையில் ரூ. 90,270 இலட்சத்திலிருந்து (சஎஉ 3,450 இலட்சம்) ரூ. 91,810 இலட்சத்திற்கு (சஎஉ 3,560 இலட்சம்) அதிகரித்துள்ளது. அரசினல் உத்தரவாதமளிக்கப்பட்ட தனியார், துறைக் கடன்கள் ரூ. 980 இலட்சத்திற்கு (சஎஉ 40 இலட்சம்) வகை கூறிய வேளையில் 1984 ஆம் ஆண்டின் இறுதியில் அரசின் உத்தரவாதமல்லாக் கடன்கள் ரூ. 11,780 இலட்சத்திற்கு (சஎஉ 460 இலட்சம்) வகை கூறியது.

சகல துறைகளிலுமான மொத்த நீண்டகால, நடுத்தரகால கடன்கள் 1983 இல் ரூ. 568,920 இலட்சத்திலிருந்து (சஎஉ 21,740 இலட்சம்) 1984 இன் ரூ. 646,490 இலட்சத்திற்கு அதிகரித்தது. (சஎஉ 25,100 இலட்சம்) இக்கடன்கள் ஏனைய மொத்த வெளிநின்ற வெளிநாட்டுப் படுகடன்களின் 1983 இன் 83 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 1984 இன் இறுதியில் 87 சதவீதமாக விளங்கியது.

1984 இன் வெளிநாட்டுப் படுகடனின் உள்ளமைப்பின் குறிப்பிடத்தக்க தன்மை யாதெனில் 1984 இல் குறுங்கால மற்றும் ஏனைய கடன்களின் வகைகளில் ஏற்பட்ட கணிசமானளவு வீழ்ச்சி (14 சதவீதம்) யேயாகும். இவ்வீழ்ச்சியானது மத்திய வங்கியின் வெளிநாட்டுக் கடன்பாடுகளில் பெரிதும் பிரதிபலித்ததுடன் இது 1983 இன் ரூ. 18,730 இலட்சத்திலிருந்து (சஎஉ 720 இலட்சம்) 1984 இல் ரூ. 130 இலட்சத்திற்கு (சஎஉ 5 இலட்சம்) வீழ்ச்சியுற்றது. பன்னாட்டு நாணய நிதியத்திலிருந்தான வெளிநின்ற எடுப்பனவுகள் கூட 1983 இன் சஎஉ 1,960 இலட்சத்திலிருந்து 1984 இல் சஎஉ 1,920 இலட்சத்திற்குக் குறைவடைந்தது. ''ஏனைய கடன்களில்'' ஏற்பட்ட அதிகரிப்பிற்கு கொழும்பு பெரும்பாக பொருளாதார ஆணைக்குழுவினதும் ஏனைய முயற்சிகளினதும் உயர்வான வெளிநாட்டு நாணய வங்கித்தொழில் பிரிவுகளின் கடன்பாடுகளே பெரும்பாலும் காரணமாகும்.

### படுகடன் பணிக் கொடுப்பனவுகள்

நீண்டகால, நடுத்தரகாலக் கடன்களின் தீர்ப்பனவுகளையும் எல்லா வெளிநாட்டுக் கடன்களின் மீதான வட்டிக் கொடுப்பனவுகளையும் உள்ளடக்கிய 1983 இன் படுகடன் பணிக் கொடுப்பனவுகள் ரூ. 71,360 இலட்சத்திலிருந்து (சஎஉ 2,870 இலட்சம்) 1984 இல் ரூ. 79,230 இலட்சத்திற்கு (சஎஉ 3,040 இலட்சம்) அதிகரித்தது. இந்தத் தொகைகள் கொழும்பு பெரும்பாக பொருளாதார ஆணைக்குழுவின் முயற்சிகளினதும் ஏனைய முயற்சிகளினதும் வெளிநாட்டு நாணய வங்கித் தொழில் பிரிவுகளின் மூலதனத்தின் மீள் கொடுப்பனவுகளை உள்ளடக்கவில்லை. எனினும் இந்தக் கடன்களின் மீதானவட்டிக் கொடுப்பனவுகள் உள்ளடக்கப்பட்டுள்ளன. ஆண்டுக் காலத்தில் பன்னாட்டு நாணய நிதியக் கொடுக்கல் வாங்கல்கள்

அட்டவணை 1.40

**வெளிநின்ற வெளிநாட்டுப் படுகடன் 1980–1984**

| வகை | ரூபா பத்து இலட்சம் | | | | | சி.எ.உ. பத்து இலட்சம் | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | 1980 | 1981 | 1982 | 1983 | 1984(அ) | 1980 | 1981 | 1982 | 1983 | 1984(அ) |
| 1. நீண்டகால படுகடன் ... | 22,276.8 | 29,172.1 | 34,597.3 | 46,025.0 | 53,680.9 | 973.6 | 1,219.6 | 1,471.1 | 1,758.4 | 2,083.9 |
| இதில் | | | | | | | | | | |
| 1.1 செயற்றிட்டக் கடன்கள் ... | 6,784.3 | 9,232.7 | 12,451.8 | 19,531.0 | 25,971.0 | 296.5 | 386.0 | 529.5 | 746.2 | 1,008.2 |
| 1.2 செயற்றிட்டமல்லாக் கடன்கள் ... | 13,305.5 | 17,433.3 | 19,545.6 | 23,490.3 | 24,805.2 | 581.5 | 728.8 | 831.1 | 897.5 | 962.9 |
| 1.3 ப. நா. நி. பொறுப்பாண்மை நிதியக் கடன்கள் ... | 2,187.0 | 2,506.1 | 2,599.9 | 3,003.7 | 2,904.7 | 95.6 | 104.8 | 110.5 | 114.7 | 112.8 |
| 2. நிரம்பலர் கொடுகடன்கள் ... | 837.4 | 1,114.6 | 996.6 | 889.4 | 588.6 | 36.6 | 46.6 | 42.4 | 34.0 | 22.8 |
| 3. ப. நா. நி. எடுப்பனவுகள் ... | 2,334.8 | 5,319.3 | 5,088.7 | 4,870.3 | 5,050.0 | 112.6 | 241.9 | 217.8 | 196.0 | 191.8 |
| 4. வங்கிக் கடன்பாடுகள் ... | 428.6 | 266.9 | 1,851.2 | 1,873.1 | 12.7 | 18.7 | 11.2 | 78.7 | 71.6 | 0.5 |
| 5. ஏனையவை (ஆ) .. | 4,123.9 | 6,469.2 | 10,766.9 | 14,294.2 | 14,988.3 | 180.2 | 270.5 | 457.8 | 546.1 | 581.8 |
| மொத்தம் ... | 30,001.5 | 42,342.1 | 53,300.7 | 67,952.0 | 74,320.5 | 1,321.7 | 1,789.8 | 2,267.8 | 2,606.1 | 2,880.8 |

(அ) தற்காலிகமானவை.

மூலம்: இலங்கை மத்திய வங்கி.

(ஆ) அரச கூட்டுத்தாபனங்கள், எயர் லங்கா ஆகியவற்றின் வர்த்தகக் கடன்பாடுகள் வெளிநாட்டு நாணய வங்கித்தொழில் பிரிவிலிருந்தான கொழும்பு பெரும்பாக பொருளாதார ஆணைக்குழுவினதும், ஏனைய ஒப்புதலளிக்கப்பட்ட தொழில் மூலங்களினதும் கடன்பாடுகள், தனிப்பட்ட வெளிநாட்டுக் கடன்பாடுகள் வர்த்தக கொடு கடன்கள் ஆகியவற்றை உள்ளடக்கும்.

அட்டவணை 1.41
## படுகடன் பணிக் கொடுப்பனவுகள் 1980–1984

| விடயம் | பத்து இலட்சம் ரூபாய்களில் 1980 | 1981(அ) | 1982(அ) | 1983(அ) | 1984(ஆ) | சிஎஉ பத்து இலட்சம் 1980 | 1981(அ) | 1982(அ) | 1983(அ) | 1984(ஆ) |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1. படுகடன் பணிக் கொடுப்பனவுகள் ... | 2,762.8 | 4,449.7 | 5,216.6 | 7,135.8 | 7,923.1 | 137.0 | 197.4 | 227.5 | 287.1 | 304.2 |
| 1.1 கடன் தீர்ப்பனவுகள் ... | 1,781.5 | 2,084.1 | 2,563.3 | 3,120.7 | 3,345.3 | 91.4 | 93.8 | 112.0 | 126.5 | 128.7 |
| (i) பன்னாட்டு நாணய நிதியத்திற்கு ... | 748.5 | 1,289.2 | 1,146.3 | 1,097.3 | 593.3 | 43.4 | 59.1 | 49.9 | 46.2 | 22.7 |
| (ii) ஏனையவற்றிற்கு (இ) ... | 1,033.0 | 794.9 | 1,417.0 | 2,023.4 | 2,752.0 | 48.0 | 34.7 | 62.1 | 80.3 | 106.0 |
| 1.2 வட்டிக் கொடுப்பனவுகள் ... | 981.3 | 2,365.6 | 2,653.3 | 4,015.1 | 4,577.8 | 45.6 | 103.6 | 115.5 | 160.6 | 175.5 |
| (i) பன்னாட்டு நாணய நிதியத்திற்கு ... | 345.6 | 487.6 | 519.5 | 749.3 | 819.2 | 12.4 | 21.7 | 22.4 | 30.8 | 31.4 |
| (ii) ஏனையவற்றிற்கு ... | 635.7 | 1,878.0 | 2,133.8 | 3,265.8 | 3,758.6 | 33.2 | 81.9 | 93.1 | 129.8 | 144.1 |
| 2. வணிகப் பொருட்களின் ஏற்றுமதிகளினதும் பணிகளிலுமிருந்தான வருவாய்கள் ... | 22,207.8 | 26,526.1 | 28,059.8 | 33,071.6 | 46,062.2 | 1,032.0 | 1,168.2 | 1,221.7 | 1,312.9 | 1,769.3 |
| 3. வணிகப் பொருட்கள் ஏற்றுமதிகள் பணிகளிலிருந்தான பெறுகைகளும் தனியார் மாற்றல்களும் ... | 24,725.8 | 30,955.9 | 34,083.5 | 39,987.2 | 53,734.4 | 1,149.0 | 1,363.3 | 1,484.1 | 1,588.0 | 2,063.5 |
| 4. படுகடன் பணிவிகிதங்கள் (ஈ) (2இன் சதவீதமாக) | | | | | | | | | | |
| (i) முழு மொத்த விகிதம் ... | 12.4 | 16.8 | 18.6 | 21.6 | 17.2 | 13.3 | 16.9 | 18.6 | 21.9 | 17.2 |
| (ii) ப.நா.நி. கொடுக்கல் வாங்கல் தவிர்ந்த ... | 7.5 | 10.1 | 12.7 | 16.0 | 14.1 | 7.9 | 10.0 | 12.7 | 16.0 | 14.1 |
| 5. படுகடன் பணி விகிதம் (ஈ) (3 இன் சதவீதமாக) | | | | | | | | | | |
| (i) முழு மொத்த விகிதம் ... | 11.2 | 14.4 | 15.3 | 17.8 | 14.7 | 11.9 | 14.5 | 15.3 | 18.1 | 14.7 |
| (ii) ப. நா. நி. கொடுக்கல் வாங்கல் தவிர்ந்த ... | 6.7 | 8.6 | 10.4 | 13.2 | 12.1 | 7.1 | 8.6 | 10.4 | 13.2 | 12.1 |

(அ) திருத்தப்பட்டவை.

(ஆ) தற்காலிகமானவை.

(இ) தகவல்கள் கிடைக்கப் பெறுமையினால், கொழும்பு பெரும்பாக பொருளாதார ஆணைக்குழு முயற்சிகளுக்கான வெளிநாட்டு நாணய வங்கித்தொழில் பிரிவுக் கடன்கள் தொடர்பான கடன் தீர்ப்பனவுகளும் ஏனைய ஒப்புதலளிக்கப்பட்ட முயற்சிகளுக்கான வெளிநாட்டு வங்கிப் பிரிவுக் கடன்களும் இங்கு உள்ளடக்கப்படவில்லை.

(ஈ) படுகடன் பணி விகிதம் ரூபாய் பெறுமதிகளைப் பயன்படுத்தி கணிக்கப்பட்டது. சிஎஉ பெறுமதிகளைப் பயன்படுத்திக் கணிக்கப்பட்ட படுகடன் பணி விகிதம் ஆண்டுப் பகுதியில் செலாவணி வீதங்களின் மாற்றங்களினால் இவ்விகிதங்களிலிருந்து வேறுபடலாம்.

மூலம்: இலங்கை மத்திய வங்கி.

தொடர்பான மீள் கொள்வனவுகள், வட்டியும் பணிக்கொடுப்பனவுகளும் என்பன முறையே ரூ. 5,930 இலட்சம் (சிஎஉ 230 இலட்சம்) ரூ. 8,190 இலட்சமாக (சிஎஉ 310 இலட்சம்) விளங்கின. 1983 இன் இது தொடர்பான எண் தொகைகள் முறையே ரூ. 10,970 இலட்சமாகவும் (சிஎஉ 460 இலட்சம்) ரூ. 7,490 இலட்சமாகவும் (சிஎஉ 310 இலட்சம்) விளங்கின. சிஎஉ நியதிகளில் பொருட்கள்; பணிகளிலிருந்தான ஏற்றுமதி வருவாய்களுக்கும் மொத்தப் படுகடன் பணிக் கொடுப்பனவுக்குமிடையிலான விகிதம் 1983 இன் 21.9 சதவீதத்திலிருந்து 1984 இல் 17.2 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தது. இந்தக் குறைப்புக்கு ஏற்றுமதி வருவாய்களில் ஏற்பட்ட அதிகரிப்பு முதன்மைக் காரணியாயிருந்தது. பன்னாட்டு நாணய நிதியக் கொடுக்கல் வாங்கல்கள் தவிர்ந்த படுகடன் பணிவிகிதம் 1983 இன் 16.0 சதவீதத்திலிருந்து 1984 இல் 14.1 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தது. வணிக ஏற்றுமதிகள், பணிகள், மற்றும் தனியார் மாற்றல்களில் இருந்தான பெறுகைகளின் விகிதமாக, முழு மொத்த படுகடன் பணிக் கொடுப்பனவுகள், 1983 இற்கும் 1984 இற்கும் இடையில் 18.1 சதவீதத்திலிருந்து 14.7 சதவீதத்திற்கு வீழ்ச்சியுற்றது.

## அரசின் இறைத் தொழிற்பாடுகள்*

அரசின் இறைத் தொழிற்பாடுகள் 1984 இன் வரவு செலவுத் திட்டக் குறையினைக் கணிசமான அளவு குறைவடையச் செய்து வங்கித்தொழில் அமைப்பிற்குப் பெருமளவான கடனை மீளச் செலுத்த வழிவகுத்தது. வரவுசெலவுத் திட்டத்தின் நடைமுறைக் கணக்கு மிகையினை ஏற்படுத்தி மூலதனச் செலவுக்கான மூலவளத்தில் ஒரு பகுதியினை வழங்கியது. எனவே வரவு செலவுத் திட்டக் கடன்பாடுகள் மூலதனச் செலவினை நிதியிடுவதற்கு வேண்டிய மூலவளத்தின் பற்றுக்குறையின் அளவுக்கு மட்டும் தனியே மட்டுப்படுத்தப்பட்டிருந்தன.

### இறைவெளிப்பாடு

முற்பணக்கணக்குகளின் தேறிய வெளிக் கொடுப்பனவையும் உள்ளடக்கிய மொத்த அரசின் செலவு ரூ. 535,930 இலட்சமாக அமைந்து முந்திய ஆண்டினை விட 14 சதவீத அதிகரிப்பைக் காட்டியது.செலவின் வளர்ச்சி 10 சதவீதப் புள்ளிகளால் வீழ்ச்சியடைந்தமையினால் மொத்த உள்நாட்டு உற்பத்தியுடன் தொடர்பான செலவின் விகிதாசாரம் 38 சதவீதத்திலிருந்து 35 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தது. மொத்த அரசிறை ரூ. 377,310 இலட்சமாக அமைந்து 1983 இனைவிட 50 சதவீதமான அதிகரிப்பைக் காட்டியதுடன் நடைமுறைக் கணக்கு மிகைக்கு ரூ. 58,880 இலட்சத்தினை வழங்கியது. மீண்டெழும் செலவு ரூ. 289,260 இலட்சமாக அமைந்து 21 சதவீத அதிகரிப்பைக் காட்டியவேளையில் முற்பணக் கணக்குகள் மீதான தேறிய வெளிக் கொடுப்பனவுகள் ரூ. 29,170 இலட்சமாக அமைந்து 1983 இனைவிட ஏறக்குறைய மும்மடங்கு அதிகரிப்பினைப் பதிவு செய்தது. மொத்த மூலதனச் செலவு சிறிதளவினால் அதிகரித்து ரூ. 217,500 இலட்சமாக விளங்கியது. இது முந்திய ஆண்டின் 16 சதவீத அதிகரிப்புடன் ஒப்பிடத்தக்கது. வரவுசெலவுத் திட்டக்குறை ரூ. 158,620 இலட்சமாக அமைந்து 27 சதவீத வீழ்ச்சியைக் காட்டியது. மொத்த உள்நாட்டு உற்பத்தியின் சதவீதமாக நோக்குகையில் வரவு செலவுத்திட்டக் குறை 18 சதவீதத்திலிருந்து 11 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தது.

---

* அரசின் கணக்குகளின் முற்றுப்படுத்தலில் தங்கியிருக்கும் தற்காலிகத் தரவுகளை அடிப்படையாகக் கொண்டது.